இருக்க முடியும். அதை ஏன் செய்யவில்லை என்பதற்கு அவர் பதில் சொல்ல மாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட கவனக் குறைவுகள் இனி ஏற்படாது, இந்த அரசு அதைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

பெரியாற்றிலிருந்து புதிய கால்வாய்.

கு. கா. வி. எண். 5—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுரை மாவட்டம் பெரியாற்றிலிருந்து சுத்தகங்கை, கட்டமலையான்பட்டி, நாகலாபுரம், தொம்புச்சேரி வழியாக புதிய கால்வாய் வெட்டும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அந்தப்பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அண்டு (ஆ) : இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் விரிவான ஆய்வில் உள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ பார்க்காமல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு, செலவு செய்வதற்கு தக்கபடி விவசாய உற்பத்தி இருக்குமா என்பதை கவனத்தில் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், வறட்சி அதிகம் உள்ள பகுதிகளில், அதையும் தாண்டி அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதை "செலக்டிவ் ஸ்கீம்" என்ற முறையில் பரிசீலனை செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதி வறட்சிப் பகுதியாக இருக்குமானால் " பெனிபிட் காஸ்ட் ரேஷ்யோ " எதையும் நாங்கள் பார்க்காமல் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வோம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்தெந்த அடிப்படையில் புதிய திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் புதிய திட்டங்கள் எத்தனை இருக்கின்றன என்பதை இந்த அவையில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

1980 ஜூலை 5]

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பெரியார்—வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மிஞ்சுகின்ற உபரி நீர் எத்தனை ஆயிரம் ஏக்கருக்குக் கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, "மதுரை மாவட்டம், பெரியாற்றிலிருந்து சுத்தகங்கை, கட்டமலையான்பட்டி, நாகலாபுரம், டொம்புச்சேரி வழியாக புதிய கால்வாய் வெட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா" என்பதாகும். பரிசீலனையில் இருக்கிறது என்பது என்னுடைய பதில்". அதற்கடுத்து, 'பெனிபிட் காஸ்ட் ரேஷயோ பார்க்காமல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா?" என்பது இன்னொரு கேள்வி. அதையும் பரிசீலிப்போம் என்று பதில் சொல்லிவிட்டேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இது போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுகிறபோது அரசு வருவாயை எதிர் நோக்காமல் பரிசீலிக்கும் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொல்லி இருந்தார்கள். இப்போது என்ன கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அமைச்சர் என்ன கொள்கை அறிவித்து இருந்தாரோ அதே கொள்கைதான் இப்போதும் கடைபிடிக்கப்படுகிறது. கொள்கையிலே குழப்பம் இல்லை. பெனிபிட் காஸ்ட் ரேஷயோ பார்க்காமல் இருக்கும் நிலைமை ஏற்படுகின்றபோது நிச்சயமாக அரசு அந்தத் திட்டங்களைப் பரிசீலிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியார் மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கியில் இருந்து கடன் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியானால் எத்தனை கோடி அவர்கள் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கொடுக்கவில்லை என்றால், "அன் எக்கனாமிக்" என்று பார்க்காமல் நாமே அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும், பெரியார் அணைத் திட்டத்தை ஒட்டி வந்து இருப்பதால் சொல்கிறேன். 41 கோடி ரூபாய் அளவிலே உலக வங்கி மூலமாகக் கடன் பெறப்பட்டு, பெரியார்—வைகை கால்வாய் சீரமைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.